நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

ருைப்பு ஜூலை'83 நினைவாக...

இதழ்-2 ஜூலை/ஓகஸ்ட், 1990 விலை.ரூ.5.




# யுத்தத்தை நிறுத்து!

எந்த யுத்தத்திலும் முதலாவது களப்பலி உண்மை [illegible] பிணைக்கப்பட்டுள்ளது. தமிழ் பேசும் [illegible] சொல்வார்கள். வடக்குக் கிழக்கு யுத்தத்திலும் இது உண்மையானது. [illegible] சமாதானத்தைக் கொண்டு வரவும் இப்போதைய வடக்குக் கிழக்கு யுத்தத்திற்கு [illegible] தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை [illegible] மாதம் கடந்த ஒரு வருடப் பேச்சுவார்த்தைகளை [illegible] ன.

ஒரு மாத யுத்தத்திலும் இரு தரப்பும் [illegible] மே யுத்தத்தை நிறுத்தும் சமாதானத்தை [illegible] விடவில்லை; நூற்றுக்கணக்கில் அப்பாவி [illegible] சமாதானப் படையும் [illegible] வெல்த தையும் கோடிக் கணக்கில் சொத்துக்கள் எரிந்து [illegible] சமாதானத்தை கொண்டுவர முடியாது. [illegible] அநியாயத்திற்குமிடையேயான யுத்தம் [illegible] உரிமையை [illegible] சுயநிர்ணய [illegible] வேறெதையும் கூறுகிறது.

[illegible] வேண்டும் [illegible] அநியாயம் [illegible]

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி...

□ □ □ □

எனது நண்பர் ஒருவரும் நானும் ஒரு தடவை ஒரு மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான லைசன்ஸ் பத்திரம் பெற நாராயன்பிட்டியிலுள்ள மோட்டார் வாகன பதிவு நிலையத்திற்கு (R. M. V.) சென்றிருந்தோம். அதன் வாயிலிலிருந்து நாம் எதிர்கொண்ட அனைத்து ஊழியர்களுமே சிங்கள, அல்லது சிங்களம் பேசுகின்ற ஊழியர்களாகவே இருந்தனர்.

தமிழ் பேசும் ஒரு உத்தியோகத்தரைக்கூட அங்கு காண முடியவில்லை.

இருப்பவர்களில் பலருக்கு ஆங்கிலத்தில் உரையாடுவது கூட சிரமமாக இருந்தது. அங்குள்ள அனைத்து கவுண்டர்களிலும் சிங்களத்தில் மட்டுமே அறிவிப்புக்கள் எழுதப்பட்டிருந்தன.

ஓரளவு சிங்களம் பேசத் தெரிந்த போதும், வாசிக்கத் தெரியாததால் எனது நண்பர் லைசன்ஸ் எடுப்பதற்கான விண்ணப்படிவத்தை பாரம் கொடுப்பதற்கு பட்ட அவஸ்தையை கூடநின்ற என்னால் சகிக்கமுடியவில்லை. தமிழ் மட்டுமே தெரிந்த, ஆங்கிலமோ சிங்களமோ அவ்வளவாக தெரியாத ஒருவர் தமது விண்ணப்பத்தை சமர்ப்பிப்பது என்பது எவ்வளவு சிரமம் என்பதை நான் அன்று புரிந்து கொண்டேன்.

நாம் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அங்கே இங்கே என்று காட்டினார்களே ஒழிய எதையும் தெளிவாக அவர்களிடமிருந்து புரிந்து கொள்ளமுடியவில்லை.

ஈற்றில் ரூ. 50/-. கொடுத்து அங்கிருந்த ஓரளவு தமிழ் தெரிந்த ஒரு 'புரோக்கர்' மூலமாகவே அவரால் விண்ணப்பத்தை கையளிக்க முடிந்தது.

தமிழ் மொழி உத்தியோகபூர்வ மொழி என அறிவிக்கப்பட்ட பின்பும் இந்த நிலை நீடிப்பது ஏன் என்று உண்மையிலேயே எனக்குப் புரியவில்லை. தமிழில் வேலை செய்ய போதுமான ஆட்கள் இல்லாததே காரணம் என்று சொன்னார் எனது நண்பர் ஒருவர். இவர் ஒரு 'அரசு திணைக்கள அதிகாரி'.

அப்படியானால் தமிழ் தெரிந்தவர்களை எடுப்பதில் ஏன் அரசு அக்கறை காட்டாமல் இருக்கிறது என்று கேட்டேன் அவரிடம்.

'அது எமது வேலையல்ல, அரசாங்கத்தின் வேலை என்றார் அவர்.


'நீங்கள் இதுபற்றி அரசிடம் தெரிவித்தீர்களா?' என்றேன் நான்

'நாங்கள் தெரிவிக்க வேண்டிய அவசியம் வரவில்லை. ஏனென்றால் அத்தகைய திட்டவட்டமான அறிவித்தல் எதுவும் அரசால் எமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றார் அவர்.

'அப்போ, தமிழ் மொழியின் உத்தியோகபூர்வ அந்தஸ்து......' என்று கேட்டேன் நான்.

'இது என்னிடம் கேட்க வேண்டிய கேள்வி அல்ல, நீ அரசியல்வாதிகளிடம் கேட்க வேண்டிய கேள்வி இது' என்றார் அவர்.

'அப்படியா?... யாராவது அரசியல்வாதிகள் பதிலளிப்பார்களா?'




இரண்டு மாதங்களுக்கு முன்பு கொழும்பிலிருக்கும் தமிழரின் 'பாரம்பரியப் பிரதேசங்களில்' ஒன்றான வெள்ளவத்தைக்கு நண்பர் ஒருவரைக் காணச் சென்றிருந்தேன். நண்பர் உரும்பிராயைச் சேர்ந்த தமிழ்க் குடும்பம் ஒன்றோடு, ஒரே வீட்டில் இரு குடும்பமாக வாழ்பவர். நான் போன சமயம் நண்பர் இல்லை. கொஞ்ச நேரம் காத்திருக்கலாம் என்று தீர்மானம். உரும்பிராய் தமிழ்க் குடும்பத்திற்கு இரண்டு அழகான குழந்தைக் குஞ்சுகள். சிரிப்பு; களிப்பு; ஒரே கலகலப்புத்தான். தாயும் இடையிடை வந்து குழந்தைகளுடன் அளவளாவிச் செல்லும் போது தான் அவர்கள் ஆங்கிலத்தில்தான் கதைக்கிறார்கள் என்று தெரிந்தது.

மூத்த குழந்தையைக் கேட்டேன்: 'நீங்கள் வீட்டில தமிழ் கதைக்கிறேல்லயா?'

பெரியதொரு முகபாவனையோடு 'நோ' என்றது.

'ஏன்' என்று மறுபடி கேட்டேன்.

'டடிக்கும் மம்மிக்கும் விருப்பமில்ல. ஜஃப்னா பீப்பிள் தான் தமிழ்ல கதைப்பாங்களாம். கொலம்பில தமிழ்ல் வீட்ல இங்லீஷ்லதானாம்...'

தமிழும் இல்லாமல் முற்றாய் ஆங்கிலமும் தெரியாமல் இருக்கும் இந்த அலித் தமிழர்களை எந்தத் தேசிய இனத்துக்குள் சேர்ப்பது என்று ஸ்டாலினுக்குத்தான் எழுதிக் கேட்க வேண்டும்!

அமைச்சர் தேவராஜின் முயற்சியினால் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தின் ஆரம்பக் கட்டம் இப்போது இலங்கையிலும் நடைமுறையில் உள்ளது என்பது ஆரோக்கியமான அம்சம். எனினும் இலங்கை அரசாங்க எந்திரத்துக்கு இந்தச் சீர்திருத்தங்களில் நம்பிக்கையில்லை என்று தெரிகிறது. அரசாங்கத் திணைக்களங்கள், வீதிப் பெயர்ப் பலகைகள் மற்றும் ஆங்காங்கே தமிழ் மொழியிலும் (தப்பித் தவறி) ஏதாவது எழுதிவிட வேண்டிய சந்தர்ப்பங்கள் வந்து விடுகிறபோது இலங்கை அரசு எந்திரம் கண்டுபிடித்துள்ள, உருவாக்கியுள்ள 'புதுத் தமிழ் எழுத்துக்கள்' சிலவற்றைப் பாருங்கள் :

'பொா'
'ா' 'ை'
'ஞ்'

புதிய சில சொற்களும் தொடர்களும் ;

'பெதேசம்'
'மைலே'
'கொழம்பு'
'பொலிசியட'
'பிரந்கள்' 'கேசிய'

பாண்டியன் தமிழ் வளர்த்த, வளர்ந்த, வழங்கிய மதுரையில் நடந்தது இது. பதினொராவது குறுக்குத் தெரு எங்கே என்று தேடி அலைந்து கொண்டிருந்தனர் நமது நண்பர் இருவர். (முன்னாள் தீவிரவாதிகள்; இந்நாள் தீவுவாதிகள்)

'யாதுமூரே யாவரும் கேளிர்' என்ற நினைப்பில் யாபேரையும் 'பதினொராவது குறுக்குத் தெரு எங்கே' என்று உசாவிச் சோர்ந்தனர்.

கிடைத்த பதில்: 'குறுக்குத் தெருவா? இன்னா சார் அது? இங்கே கெடையாது!'

திடீரென்று நண்பருக்கு பொறி தட்டிற்று.

'சார் பதினொண்ணாவது கிராஸ் ஸ்டீரிட் எங்கே இருக்கு' என்றார்.

'அப்படித் தமிழ்ல கேளய்யா! புரியாத பாஷையில கேட்டா நமக்கென்ன தெரியும்!'


பதினொன்றாம் குறுக்குத் தெருவை அவர்கள் போய்ச் சேர்ந்தார்கள் என்பது சொல்லித் தெரிவதில்லை!

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன்பே வாளொடு (பாட பேதம்: வாலொடு) முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க் குடி என்ற தொடர் தென்னிந்தியத் திராவிட முன்னேற்றக் கழகத் தேசியவாதம் உச்சத்திலிருந்த போது பிரபலமான தொடர். நம்மூரிலும் ஒரு சில படித்த, மேலோங்கிக் குடியினரிடையே (elites) "Before there was God, Tamil is" என்ற நோக்கு இன்னும் நிலவுகிறது. இவர்கள்தான் ஈழத் தமிழ்ப் பேரினவாதத்துக்கும் உதவுபவர்கள். தமிழுக்கு மட்டுமல்ல, சிங்களத்துக்கும்-அம்மொழிக்கும், தேசிய இனத்துவத்துக்குமுரிய பொற்கால மாயைகள் இருக்கத்தானே செய்யும்?

நான் இப்போது சொல்லப்போவது ஒரு சிங்களத் தற்கால மாயை பற்றி. 29-06-90 டெயிலி நியூஸில் ஒரு விளம்பர அனுபந்தம்: 'சிங்கள கொம்பியூட்டரின்' பிறப்பு பற்றியது.

இலங்கையில் 'சிங்களக் கொம்பியூட்டர்' உருவானமை பற்றி அவர்கள் எழுதுகிற போது இந்த Hi-Tech பொருட்களுக்கும் தேசிய இனம், மதம், சாதி எல்லாம் எதிர்காலத்தில் ஏற்பட்டு விடுமோ என்று பயமாக இருக்கிறது.

## லூசியன் கேட்ட கேள்வி



SUNDAY TIMES. பத்திரிகையின் வாராந்தக் 'கல எழுத்தர்' (coloumnist) லூசியன் ராஜ கருணநாயக்க அண்மையில் பட்டாளத்துக்கு ஆட்சேர்ப்பது பற்றிய சுவையான தகவலைத் தருகிறார்;

"கடந்த ஜூன் 26 அன்று என்னுடைய நண்பர் ஒருவர் வெளிநாட்டுப் பத்திரிகை நிறுவனம் ஒன்றைச் சேர்ந்தவர், பட்டாளத்தில் சேரக் காலி முகத் திடலில் திரண்டிருந்தவர்களில் கொஞ்சப்பேரை நேர்காண்பதற்காகச் சென்றிருந்தார்.

ஆங்கிலம் நன்கு தெரிந்த பலர் உள்ள தேசம் என்று அவர் எண்ணியிருந்த போதும் அங்கு நின்ற பல்லாயிரக் கணக்கானோரில் ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரிந்த ஒருவரையாவது அவரால் தேடிப்பிடிக்க முடியவில்லை. ஆங்கிலம் தெரிந்த மத்தியதர வர்க்கத்தினரிடமும் மேல் வர்க்கத்தினரிடமும் நாட்டுப்பற்று இல்லையா என்று அவர் என்னை வினவினார். உண்மை. எவ்வாறு இப்படி நடக்கப் போயிற்று? இலங்கையில் ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு பட்டாளத்தில் இப்படியாகச் சேரும் எத்தகைய அவசியமும் இல்லை என்றும் அப்படிச் சேரும் ஒரிருவரும் பெரிய உத்தியோகத்தர்களாகச் சேர்ந்து விடுவார்கள் என்றும் அவருக்கு விளங்கப்படுத்துவது எனக்குப் பெரும் சிரமமாக இருக்கவில்லை.'

இன்னுமொரு கேள்வியும் என் நண்பரைக் குடைந்து கொண்டிருந்தது. ஒரு தமிழரையாவது அந்தக் கூட்டத்தில் அவரால் காண முடியவில்லை. பட்டாளத்துக்குப் புதியவர்களைச் சேர்க்கும் அறிவிப்பில் இனவிகிதாசாரம் பேணப்படும் என்று அறிவிக்கப்படவில்லையா?"

## வீரசிங்ஹல சேபலுன்ட ஜயவேவா!

வடக்கு - கிழக்கில் மறுபடி யுத்தம் உக்கிரமாக ஆரம்பித்ததைத் தொடர்ந்து சிறிலங்கா நாட்டுப்பற்றும், சிங்கள, பௌத்த தேசியவாதமும் மறுபடியும் உசுப்பப்பட்டு வருகின்றன, காலிமுகத் திடலில், எரியும் வெய்யிலில், ஒரு கிளாஸ் தண்ணீர் ஒரு ரூபா விலைக்கு வாங்கி அருந்திய படி முப்படைகளிலும் சேரக் கியூவில் காத்திருந்த ஆயிரக் கணக்கான வாலிபர்கள் நிச்சயமாக சிறிலங்கா நாட்டுப் பற்றால் இம்முறை உந்தப்பட்டவர்கள் தான்.

இன்னும் பட்டி தொட்டி எங்கும் ஒட்டப்பட்டுவரும் போஸ்ரர்களும், பதாகைகளும் ஆயுதப் படைகளுக்கு வணக்கத்தையும், அவர்களுடைய தீரத்துக்கும் புனிதப் போருக்கும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றன. சிங்கள மக்களின் பல தரப்பினரும். பல வர்க்கத்தினரும், பல மட்டத்தினரும் இம்முறை போரை ஆதரிப்பது மட்டுமன்றி, போரைத்தவிர வேறேது வழியுமில்லை என்பதில் உறுதியாக இருக்கிறார்கள் என்று தெரிகிறது. 'போரை நிறுத்து' என்று ஒரு சிறு குரலாவது இடதுசாரிகளிடமிருந்து எழாதது மட்டுமல்ல போரை ஆதரிக்கும் வரலாற்றுத் தவறையும் இம்முறை அவர்கள் செய்கிறார்கள் என்பது நோக்கத்தக்கது.

அரசாங்கம் சொல்வது போல் இந்த யுத்தம் விடுதலைப் புலிகளுக்கு மட்டுமே எதிரானது தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல என்பது உண்மையானால் பின்வரும் சந்தேகங்கள் எழுவது தவிர்க்க முடியாதது:

1. 'வீர சிங்ஹள சேபுலு' என்று படையினரைப் புகழும் பதாகைகள் பரவலாகக் கட்டப்படுகின்றனவே. இதனுடைய உட்கிடக்கை என்ன? சிங்கள ராணுவம் எதிர் புலிகள் என்பது மட்டுமா?

2. முப்படையும் நூறு வீதமும் சிங்கள மக்களாலேயே நிரப்பப்படுகிறபோது, நீங்கள் நடாத்தும் யுத்தம் புலிகளுக்கெதிரானதோ அன்றிப் பூனைகளுக்கு எதிரானதோ எப்படியிருந்தும் அது தமிழ் மக்களுக்கெதிரான யுத்தமாகவே கருதப்படப்போகிறது.

3. படையினரைத் தெரிவு செய்வதில் இனவிகிதாசாரம் பேணுகின்றீர்களா?

4. மலையகத்தில் பரவலாக இளைஞர்களைக் கைது செய்வதன் உள் நோக்கம் தான் என்ன?

தென்னிலங்கையில் 1987-89 இற்கிடைப்பட்ட காலங்களில் மக்கள் விடுதலை முன்னணிக்கெதிராக படையினர் கட்டவிழ்த்து விட்ட காட்டுமிராண்டித்தனமான அழித்தொழிப்பை சிங்கள மக்கள் இலகுவில் மறந்து விட்டார்கள் என்று சொல்லலாமா?

எஸ்.ஜீ.

நன்றி - நூலகத்திட்டம்



# வாழைப்பழம் + விளக்கெண்ணெய் = ஈரோஸ்

**இ. சங்கரன்**

விடுதலைப் புலிகளுடன் இணைவது தொடர்பாக தாம் தீவிரமாக ஆலோசித்து வருவதாக ஈரோஸின் செயற்குழு உறுப்பினர் திரு. பாலகுமாரன் ஜூன் 17ந் திபதி U.N.I. செய்தியாளருக்கு வழங்கியுள்ள பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் ஈரோஸ் முழுமையாகச் சேர்ந்து கொள்வது அல்லது அதனுடன் ஒரு கூட்டுக்கு வருவது என்கிற பேச்சுக்கூட அதன் வழமையான நடவடிக்கைகள் போல புஸ்வாணம் ஆகி விடுமா என்கிற கேள்வியை அரசியல் அவதானிகள் மத்தியில் எழுப்பியுள்ளது.

ஏற்கனவே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட காலத்தில் ஈரோஸ் மேற்கொண்ட தந்திரோபாயங்கள் (?) யாவும் இவ்வாறான ஒரு கேள்வி எழுவதைத் தவிர்க்க இயலாததாக ஆக்கியுள்ளன.

1987 ஜூலையில் கைச்சாத்தான இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்பாக- ''தென் கிழக்கு ஆசியாவில் இலங்கைத் தீவு இந்தியாவிற்கு அண்மையில் இருப்பதால் இலங்கையின் அரசியல், வெளி உலக அரசியல் கோட்பாட்டினால் இந்தியாவின் பாதுகாப்பிற்குக் குந்தகம் ஏற்பட்டு விடக் கூடாது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதை நாங்கள் (ஈரோஸ்) வரவேற்கிறோம் ஆனால் அந்த ஒப்பந்தம் தமிழ் பேசும் மக்களின் நலன்களை அடகு வைத்து விடக் கூடாது என்பது தான் எங்கள் கருத்து.'' என ஈரோஸ் தெரிவித்திருந்தது.

இலங்கை - இந்திய அரசுகளின் நலன்கள் என்பது இலங்கை - இந்திய ஆட்சியாளரின் நலன்கள் என்பதும் இந்த ஒப்பந்தம் என்பது தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, வேண்டின் பிரிந்து செய்வதற்கான உரிமையையும் வழங்காமல், மாறாக இலங்கையின் அரசியலமைப்பைப் பாதுகாத்து, ஒற்றையாட்சிக்குள் சில எலும்புத் துண்டுகளை வழங்கி தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்துக்கட்டி விடும் (!) முயற்சி என்பதும், ஆட்சியாளரின் நலன் என்பது மக்களின் நலன்களுக்கு எப்போதும் நடைமுறையில் முரணானதாகவே இருந்துவந்துள்ளது என்பதும்,

தம்மை பேசும் தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தோன்றிய இயக்கங்களுள் இடதுசாரி முனையிலிருந்து தோன்றிய இயக்கமாகச் சொல்லிக் கொள்ளும் ஈரோஸுக்கு உண்மையிலேயே புரியவில்லையா? அல்லது புரிந்து கொண்டும்..

இதனது தொடர்ச்சியைத் தான் 87இன் பின்னான அதன் ஒவ்வொரு நடவடிக்கையிலும் நாம் அவதானிக்கலாம்.

87 இன் இறுதியிலும் இந்தியப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே யுத்தம் ஆரம்பமாகி ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயப்படுத்தப்பட்டும் கோடிக்கணக்கான பெறுமதியுள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டும் கிட்டத்தட்ட ஒரு மிலேச்சத்தனமான ஆக்கிரமிப்பு யுத்தத்தையே இந்தியப் படை கட்டவிழ்த்து விட்ட போது, அதுபற்றி மௌனம் சாதித்த ஈரோஸ் பின்னர் புலிகளுக்கும் இந்தியாவிற்கும் இடையே ஏற்பட்ட யுத்தம் துரதிஷ்டவசமானது எனக் கூறி தனது அரசியல் கடமையை முடித்துக் கொண்டது.

ஒரு புறம் ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடாத்திக் கொண்டே மறுபுறம் தேர்தல் ஒன்றை நடாத்தி இலங்கையில் அமைதிப்படை அமைதியை ஏற்படுத்திவிட்டது என்ற நிலையை பறைசாற்ற வடக்கு கிழக்கிற்கான மாகாண சபைத் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்துமாறு இலங்கைக்கு ஆலோசனை கூறியது.

எனவே முதலில் தேர்தல்; தேர்தல் நடைபெற்று முடிந்தால் தேர்தலுக்குப்பின் அமைதி என்ற பிரச்சாரத்தை இந்தியா முடுக்கிவிட்டது. இதற்குப் பதிலாக முதலில் அமைதி; அமைதிக்குப் பின்பே தேர்தல் என்று குரல் கொடுத்தது ஈரோஸ்.

ஆனால் தேர்தல் நெருங்க இவற்றையும் தேர்தல்களில் பங்குபற்றுவதில்லை என்ற நிலைப்பாட்டையும் தூக்கிவீசி விட்டு நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டது.

இவ்வாறு ஈரோஸ் தேர்தலில் பங்கேற்றதனூடாக வடக்கு கிழக்கில் சுமுகமான முறையில் தேர்தல் நடைபெற்றது என்றும் இந்தியப் படையினர் அங்கு அமைதியை நிலைநாட்டி விட்டனர் எனவும் பிரச்சாரம் செய்ய வழிகோலியது.

தேர்தலில் வெற்றி பெற்ற ஈரோஸ் ஆறாவது திருத்தச் சட்டத்திற்கமையச் சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்து நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக முதலில் அறிவித்தது. ஈரோஸின் இந்த அறிவிப்புக்குப் பதிலாக ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ ''பாராளுமன்றத்துக்குள் வந்து அதனை நீக்கப் போராடுங்கள்'' என்று கூறினார்.

1983 இல் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட ஆறாவது திருத்தச் சட்டத்திற்கமைய சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்து வெளியேறியது கூட்டணி, பின்னர் இவ்வாறு மறுத்து வெளியேறிய கூட்டணியும், ஏனைய தமிழ் கட்சிகளும் இந்த ஆறாவது திருத்தச் சட்டத்திற்கமைய சத்தியப் பிரமாணம் செய்து கொண்டு நாடாளுமன்றத்தினுள் நுழைந்தனர். அவர்களுடன் ஈரோஸும் நுழைந்து கொண்டது.

இவ்வாறு நுழைந்த போதும் கூட்டணியோ, ஏனையகட்சிகளோ, ஈரோஸ் உறுப்பினர்களோ எவரும் இதனை நீக்க எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமை ஒன்று இல்லை.. அவர்களது பிரச்சனைகளை வெளியில் கொண்டு வருவதற்கு, எனவே எமது மக்களின் பிரச்சனைகளை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தும் ஒரு களமாக நாடாளுமன்றத்தை பயன்படுத்துவோம் எனக் கூறி தேர்தலில் குதித்த ஈரோஸ் பின்னர் ஆறாவது திருத்தச் சட்டம் பற்றி மட்டுமின்றி எந்தப் பிரச்சனை குறித்தும் நாடாளுமன்றத்தில் பேசாது மௌனம் சாதித்து வந்தது.

இதற்கிடையில் புலிகளுக்கும் ஈரோஸிற்கும் இடையிலாள கசப்புணர்வை நீக்குவதற்காக கடந்த ஜனவரியில் பிரபாகரனுக்கும் பாலகுமாருக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாயின. பேச்சுக்கள் பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்படாத போதும் புலிகளின் நடவடிக்கைகளுக்குச் சாதகமான முறையில் செயற்படும்படி ஈரோஸ் புலிகளினால் பணிக்கப்பட்டுள்ளதாக பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தப் பேச்சுக்களை அடுத்து அரசு - புலிகள் பேச்சுவார்த்தையில் முக்கியமான இடத்தைப் பிடித்துள்ள ஆறாவது சட்ட திருத்தத்தை நீக்க அரசு தாமதப்படுத்துவதனால் தாமே தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப் போவதாக ஈரோஸ் அறிவித்தது. அதற்காக சட்டவல்லுநர்களுடனும் எதிர்கட்சிகளுடனும் ஆலோசனை நடாத்துவதாகவும் அது தெரிவித்தது. ஆறாவது திருத்தச் சட்டம் நீக்கப்படுவதற்கான ஆதரவு கிடைக்காவிடில் தான் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறி விடுறதைத் தவிர வேறு வழியில்லை என்றும் கூறியது.

ஆனால் ஜனாதிபதி பிரேமதாஸவை பாலகுமார் சந்தித்துப் பேசியதையடுத்து தனிநபர் பிரேரணையாக இதனைக் கொண்டுவந்தால் எதிர்க்கட்சிகளதும், அரசு எம். பிக்களதும் ஆதரவைப் பெறுவது கடினமாக இருக்கும் என்றும், எனவே அரசாங்கமே இதனை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்றும் ஆதலால் தாம் தனிநபர் பிரேரணையாகக் கொண்டு வரும் முயற்சியினை கைவிடுவதாகவும் தெரிவித்தது.

இன்று புலிகளுக்கும் அரசுக்கும் இடையே யுத்தம் நடைபெறுகிறது. ஆறாவது திருத்தச் சட்ட நீக்கம் பற்றிய இவர்களின் பேய்செல்லாம் வெறும் வாய்ச் சவடால்களாகிப் போய் விட்டன.

இந்த நிலையில் தான் புலிகளுடன் இணைவது பற்றி பாலகுமார் தெரிவித்துள்ளார். ஆனால் புலிகளுடன் இணைந்து செயற்பட ஈரோஸினால் முடியுமா என்பதே இன்றுள்ள கேள்வியாகவுள்ளது. எந்தக் காலத்திலும் எவருடனும் இணையாமலும் - இணைந்தும் வந்திருக்கும் ஈரோஸ் இவ்வாறான ஒரு நிலை எடுப்பின் மீளவும் இலங்கைப் படையுடன் மோத வேண்டி ஏற்படும். பிரச்சனைகளை வெளியுலகிற்கு தெரியப்படுத்த (?) பயன்படுத்தும் நாடாளுமன்றத்தை விட்டு விட்டு காடுகளை நோக்கி செல்ல வேண்டும்.

87ம் ஆண்டிற்குப் பின்னர் எந்தப் படையுடனும் மோதலில் ஈடுபடாத ஈரோஸ் மீண்டும் மோதலுக்குத் தம்மைத் தயாராக்க வேண்டும். இதற்கெல்லாம் ஈரோஸ் தயாரா? முகம் கொடுக்குமா? ஒரு தயார் நிலையில் தான் பாலகுமாரன் இவ்வாறு பேசியிருப்பாரா என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

ஏனென்றால் எதற்கும் தயாரற்ற ஒரு 'நழுவல்' நிலைக்கு ஈரோஸ் தன்னை எப்படியோ பழக்கப்படுத்தி கொண்டுவிட்டது. ஒரு சின்ன உதாரணம் ;

அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பதற்கான வாக்கெடுப்பில் ஈரோஸ் எதிர்த்து வாக்களிக்காமல் வெளியேறியுள்ளது. நவலங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார மட்டுமே இப்பிரேரணையை எதிர்த்து வாக்களித்துள்ளார்.

## 'இடம் கொடுத்து செயல்பட்டு...'

-பாலகுமாரனின் 'பாலம்' பேட்டி.

**ஈரோசுக்கும் புலிகளுக்குமான உறவு நிலை எப்படியிருக்கிறது?**

எங்கள் உறவுமுறை என்பது ஒரு தனிப்பட்ட நிலைப்பாட்டில் பிறந்தது அல்ல. ஈழப் போராட்டத்தில் பிற இயக்கங்கள் கைக்கொள்ளுகின்ற முறையைப் பொறுத்துத்தான் நாங்கள் உறவுமுறையைத் தீர்மானிக்கிறோம். அந்த வகையில் 84ஆம் ஆண்டிற்குப் பின்னால் தேசிய விடுதலைப் போராட்டம் என்ற முரண்பாடு கூர்மை அடைந்தபொழுது எங்கள் கொள்கை நிலைப்பாட்டில் கொஞ்சம் மாற்றம் கொண்டு வந்து, முடிந்தவரை தேசிய விடுதலைக்குப் போராடும் இயக்கங்களோடு நல்லிணக்க முறையில் செயல்படுகிறோம் என்பது உங்களுக்கே தெரியும். ஈழ தேசிய விடுதலை முன்னணி என்ற ஒன்று அமைக்கப்பட்டு அதில் நாங்கள் பங்கு பற்றி நீண்டகாலமாக அந்த உறவை வளர்த்து வந்ததோடு இன்றைக்கும் எங்களுடைய உறவு எல்லா இயக்கங்களோடும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் 1987க்குப் பின்னால் ஓரளவுக்கு தேசிய வாதத் தன்மையினுடைய பிரதிபலிப்பாக எதிர்ப்புச் சக்தியை வெளிக்காட்டிய போது நாங்கள் எங்களின் முழுமையான ஆதரவை அவர்களுக்கு வழங்கி இருக்கின்றோம்.



ஈரோஸ் வே. பாலகுமாரன்

ஆனால் காலக்கிரமத்தில் எங்களுடைய அரசியல் நிலைப்பாட்டுக்கும் அவர்களுடைய சில அரசியல் நிலைப்பாட்டுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்ட பொழுது அதை நாங்கள் ஏற்றுக் கொண்டு அந்த வேறுபாடுகளைப் போக்கிக் கொள்வதற்கு அவர்களுக்கும் நாங்கள் இடம் கொடுத்துச் செயல்பட்டு வருகின்றோம். ஆனாலும் அவர்கள் எங்களை காரசாரமாக விமர்ச்சிக்கிறார்கள். அதற்காக எங்களுடைய உறவு சீரழிந்துவிட்டது என்று நான் சொல்ல முடியாது. காரணம் சகல இயக்கங்களினுடைய செயல்பாடும் எல்லா விடயங்களிலும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது. கருத்துவேறுபாடு இருக்கத்தான் செய்யும். அதனால் நாங்கள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. எங்களைப் பொறுத்தவரை மோதல் வரை இட்டுச் சொல்லாமல் ஆரோக்கியமான விமர்சனங்கள் மூலம் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பார்க்கிறோம். வேறு இயக்கங்கள் எங்களைக் கொலை செய்து அட்டூழியங்கள் செய்த போதுங்கூட நாங்கள் தவிர்க்க முடியாமல் தடுப்பு நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபட்டோமே அல்லாமல் எந்த வகையிலும் மோதலில் ஈடுபட்டது கிடையாது.

நன்றி: பாலம், மார்ச், 90.

நன்றி - நூலகத்திட்டம்



# யுத்தத்தின் குழந்தை -

சரிநிகர்
இல. 6, அலோ சாலை,
கொழும்பு-3
'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே..' பாரதி.




ஜூன் மாத இதழ் தயாரிப்பிலிருந்த வேளை, "மீண்டும் போரா?" என்று முதற்பக்கச் செய்தித் தலைப்பிட்டிருந்தோம். இதழ் அச்சகத்திலிருந்து வெளியாகும் முன்பாகவே போர் பல நூற்றுக்கணக்கானோரைக் கொன்று தின்று விட்டது.

'சரிநிகர் இதழும் யுத்தத்தின் குழந்தையாகவே போயிற்று'

போரை யார் முதலில் ஆரம்பித்தார்கள் என்று புலனாய்வு செய்வதோ, குற்றத்தை யாருக்கு பிரித்துக் கொடுக்கலாம் என்று கணக்கெடுப்புச் செய்வதோ எமது நோக்கமல்ல. எனினும் சில முக்கியமான உண்மைகளைப் பதிவுசெய்ய வேண்டியது நமது காலத்தின் தேவை.

புலிகள் - அரசு பேச்சுவார்த்தைகளின் போது, இரு பகுதி யாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்ன? என்னென்ன அம்சங்கள் ஆராயப்பட்டன என்பது பற்றி மக்களுக்குத் திட்டவட்டமாக ஒன்றும் தெரியாது. ஊகங்களை வைத்து ஆய்வு செய்வது விஞ்ஞானமல்ல; அது நமது நோக்கமுமல்ல. எனினும் விட்டும், தொட்டும், ஊடியும் கூடியும் தொடர்ந்த பன்னிரு மாதப் பேச்சுக்களின் விளைவாக தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் சிக்கல்கள், பிரச்சினைகள் தொடர்பாக ஆக்கபூர்வமாக, நிலைத்து நிற்கக் கூடியதான என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற கேள்விக்கு விடை : ஒரு பெருமூச்சு!

அரசும் - புலிகளும், பரஸ்பரம் புரிந்துணர்வோடும், நேர்மையோடும்தான் பேசினார்களா என்றால் (அவர்கள் சொல்வது போல) இல்லை என்றுதான் தெரிகிறது. ஒருபுறம் அரசு வடக்குக் கிழக்கில் படைபலத்தை மறுபடியும் பெருக்கும் முயற்சிகளிலீடுபட, மறுபுறம் புலிகள் யுத்தத்திற்குத் தயாராக, மொத்தத்தில் பாவம் மக்கள்.

விடுதலைப் புலிகள் இழைத்துள்ள சந்தர்ப்பவாதத் தவறுகளை மக்களுக்குப் புரிய வைப்பது அவசியமாகிறது. 'பிரேமதாசா நேர்மையானவர்; புரிந்துணர்வுள்ளவர் அவரோடு பிரச்சினைகளை பேசித் தீர்க்கலாம்' என்று தமிழ் மக்கள் மத்தியில் பிரேமதாசா அரசைப் பற்றி நல்ல பிம்பத்தை உருவாக்கி விட்டு (அது பொய் என்பது வேறு விசயம்) திடீரென்று அதனைத் தலைகீழாக்கி யுத்தத்தைத் தொடங்குவது எந்த அரசியல் சாணக்கியத்தின்பாற்படுமோ தெரியாது.

காலம் காலமாக 'எதிரி'யாக இருந்து வந்த இலங்கை அரசு மீது போர் தொடுத்ததற்கான நியாயம் சொல்லக்கூட முடியாத அளவுக்கு புலிகளின் அரசியல் வறுமைப்பட்டு விட்டது.

இன்னொரு புறம், புலிகள் பாதுகாப்பு அரண்களை வெட்டி தயார் நிலையில் இருப்பது பற்றிக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர்கள் 'வெங்காயம் சேமிக்கத்தான் கிடங்கு வெட்டுகிறார்கள்' என்று வெங்காயத்தனமாகப் பொறுப்பான அமைச்சர் பதிலளிக்கிறார். நேற்றுவரை நண்பர்களாகவும், வீரர்களாகவும் இருந்தவர்கள் திடீரென்று 'பயங்கரவாதிகளாக' மாறும் பெரும் ரஸவாதம் அரசிற்குத் தெரிந்த ஒன்றுதான் போலும்.

இத்தகைய சந்தர்ப்பவாதத் தவறுகளுக்கு மக்கள்தான் இரத்தத்தால் விலை கொடுக்க வேண்டியிருக்கிறது என்பது வரலாறு தெரிந்தவர்களுக்குத் தெரியும். விடுதலைப் புலிகள் நேர்மையாகத்தான் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்கள் என்றால், அவர்கள் அரசியல் ரீதியாகச் செய்திருக்க வேண்டியது இலங்கை அரசை அம்பலப்படுத்தக்கூடிய முறையில் திட்டவட்டமான கோரிக்கைகளை முன்வைத்திருக்க வேண்டியது ஆகும். உதாரணமாக, இலங்கையை எந்த ஒரு இனத்திற்கோ, மதத்திற்கோ சொந்தமான நாடு அல்ல என்பதை அங்கீகரித்துப் பிரகடனப்படுத்தும்படி கேட்டிருக்க வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படி கேட்டிருக்க வேண்டும். இதற்குரிய முறையில் அரசியலமைப்பை மாற்றும்படி கேட்டிருக்க வேண்டும்.

இத்தகைய கோரிக்கைகளை சீந்த இலங்கை அரசும் ஏற்றுக் கொள்ளாது என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது. இதனை விட்டு விட்டு, சுயநிர்ணய உரிமையோடு ஒப்பிடடால் காற்காசு பெறாத மாகாண சபைக் கலைப்பு போன்ற விஷயங்களையே புலிகள் கேட்டுள்ளனர்.

இது அரசை பேச்சுவார்த்தைகளின் போது, பலம் மிக்கதும் நியாயமானதுமான ஒரு பிரதிமை கொண்டதாக சர்வதேச அரங்கில் நியாயப்படுத்தவே உதவியுள்ளது.

இன்னொரு தளத்தில் அரசு 'இந்த யுத்தம் புலிகளுக்கு எதிரானது தான்; தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல' என்று எவ்வளவு தூரம் காட்டுக் கூச்சல் போட்டாலும், சாராம்சத்திலும், இறுதி ஆய்விலும், தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாமல் வடக்குக் கிழக்கில் எவருடன் தொடுக்கும் யுத்தமும் தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் எதிரானதுதான்!

அரசு செய்ய வேண்டியது நாட்டுப்பற்றை சிங்கள மக்களிடம் தூண்டி விடுவதல்ல. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலம் இந்த நாடு சிங்கள மக்களுக்குத்தான் சொந்தமானது என்ற கருத்தை மாற்றப்பாடுபடுவதாகும்.

இப்போது ஏவி விடப்படும் 'சிங்கள நாட்டுப் பற்றும்', வீர செபளுகளுக்கான' (வீர ராணுவத்தான்) தலை வணங்கிப் பிரச்சாரமும் அடிப்படையில் 87 - 89 காலகட்டத்தில் சிங்கள மக்களிடம் இருந்து அந்நியப்பட்டுப்போய், வெறுப்பையும், ஆத்திரத்தையும் சம்பாதித்துக் கொண்ட சிங்களப் பட்டாளத்தை மறுபடியும் சிங்கள மக்களோடு ஒட்ட வைக்கும் குறுகிய தேசிய வெறியே அன்றி வேறல்ல. இந்த நாட்டுப்பற்று, அறிஞர் ஒருவர் சொன்னது போல last refuge of a scoundrel (அயோக்கியனின் கடைசிப் புகலிடம்).

எனவே தான் நாம் சொல்கிறோம் :

யுத்தத்தை நிறுத்துங்கள்! சுயநிர்ணய உரிமையை அங்கீகரியுங்கள்!

சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காமல் புலிகளை ராணுவ பலத்தால் வெல்ல முடியும் என்பது கனவு. அப்படித் தான் வெல்ல முடிந்தாலும் தமிழ் மக்களிடை இருந்து சுயநிர்ணய உரிமைக்கான இன்னொரு ஆயுதக் குழு உயர்வது இயக்கவியல் உண்மை.

தமிழ் மக்களை 'ஃபாசிஸத்தின்' (Fascism) பிடியிலிருந்து விடுவிக்கப்போவதாகச் சொல்லும் இலங்கை அரசால் அது முடியாது; இந்திய அரசாலும் முடியாது; ஏனென்றால் அது தமிழ் மக்களின் பிரச்சினை. தமிழ் மக்கள் தமக்கு எது வேண்டுமோ அதனைத் நிர்மானித்துக் கொள்வார்கள்! ●

# துப்பாக்கிகளால் முடியாது!




எழுபதுகளிலும் எண்பதுகளிலும் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக எழுந்த ஒரு இளைஞர் படையின் முக்கியமான ஒரு கூறு நாபா அல்லது ரஞ்சன் என்று அழைக்கபட்ட பத்மநாபா. அவருடைய தீவிரத்திலும், விடுதலையுணர்விலும் அவருடைய எதிரிகளுக்கே சந்தேகமிருந்ததில்லை.

துரதிர்ஷ்டம்: எந்த நோக்கத்திற்காக, எந்த மக்களுடைய அடிப்படை நலன்களுக்காகக் களத்தில் குதித்தார்களோ அந்த நலன்களை அவரும் அவர் சார்ந்த இயக்கமும் கடைசிக் காலங்களில் மறந்து விட்டார்கள். அவர்களை மட்டும் சொல்லி என்ன? புலிகள் உட்பட வேறு யாராவது ஞாபகம் வைத்திருக்கிறார்களா என்பது பெரிய கேள்விக் குறிதான்.

சென்னைப் படு கொலைகளில் நாபாவும் கொல்லப்பட்டு விட்டார். சம்பிரதாய பூர்வமான அஞ்சலிகளுக்கும், வீரவணக்கங்களுக்கும் வடக்குக் கிழக்கு மக்கள் சலித்துப் போய் விட்டார்கள். ஆனால் துப்பாக்கி முனையில் ஒரு போதும் ஜனநாயகம் மலர முடியாது! அது போலவே துப்பாக்கி முனையில் ஒரு போதும் மாற்றுக் கருத்தை அழிக்கவும் முடியாது.

இது விடுதலைப் புலிகளுக்கும் பொருந்தும்; பத்மநாபாவுக்கும் பொருந்தும்!


— சுப்புக்குட்டி.



## ஜூலை 83

சாய்ந்து நின்ற அரசமரம்;
சரிந்தபடி
விழிமூடிய புத்தபிரான்;
சுற்றிவர அகல் விளக்கு
அணையாது எரிந்தபடி-
எப்போதும் நெய்யூற
எரிந்தபடி நின்றிருக்கும்
அகல் விளக்குகள்
ஒன்றாகிப் பெருத்து
ஒருவிளக்காயின.
போதி மாதவப் புண்ணியபூமி
மீண்டுமொருமுறை
ஒளியூட்டப்பட்டது
இரவுகள் பகலாகிய
ஒளி வெள்ளத்தில்
வானுக்கும் பூமிக்கும் பாலமாய் நின்ற
சோதிப் பிழம்பில்
அரச மரத்தின் ஒவ்வொரு இலையும்
நிமிர்ந்து நின்றது.
சிறைகளிலின்றும்
வீதிகளினின்றும்
வீடுகளிலிருந்தும்
எமது மக்கள் விடுதலை பெற்றனர்.
உடலிலிருந்து உயிருக்கும்
கபாலத்திலிருந்து கண்ணுக்கும்
வாயிலிருந்து நாவுக்கும்
விடுதலை கிடைத்தது.
மகா நிர்வாணத்தின்
இரண்டாயிரம் ஆண்டுகளில்
முதல் முதலாக
ஒரு தேசமே
நிர்வாணமானது.

— புதிஷ்ட்ரா.




## அம்பாறை, ஜூன், '90

## இரத்த நிழல்

இரவு
நான் விழிகளை மூடினேன்
எனக்கோ அமைதியாகத் தூங்கவேண்டியிருந்தது.
தூக்கமற்ற விழிகள்
ஓ! எனது சகோதரர்களின்
இரத்த நிழல்கள் என்னை நனைத்தன.
என்னால் தூங்கவே முடியவில்லை
எனக்கோ தூக்கமும் வேண்டியதாகவில்லை.
நான் வீதியில் இறங்கினேன்.
எனக்கோ நடக்கவேண்டியிருந்தது.
நான் நடந்தேன்

அது ஒரு கோடையிரவாயிருந்தது.

நட்சத்திரங்கள் நிலத்தின் மீது
கண்ணீர்களைச் சிந்தின.
வாழப்பிறந்த மனிதர்களிற்காக
நான் அழுதேன்.
அவர்கள் ஒரு அழகிய உலகைச் செய்தார்கள்
அதனைத் தொலைத்தார்கள்.
ஒரு சதியின் கைதிகளானார்கள்.
உலகு, காசுக்கார வர்க்கத்திற்கு அழகியது.
வறுமை வர்க்கத்திற்குப் பயங்கரமானது
நான் தனிமையில் அழுதேன்.
நாய்கள் என்னைத் துரத்தின.
நான் எனக்குள் போராடினேன்.
நானோ தூக்கமற்று நடந்தேன்.

அது ஒரு கோடையிரவாயிருந்தது.


இரத்த நிழல்களும்

கண்ணீர் நிழல்களும்
எனக்கு முன்னே ஒரு வறுமை நடனம் செய்தன.
இரத்தங்களும், கண்ணீர்களும் பேசின.

"மனிதன் போருடன் விழித்தான்.
வீணாக இறந்ததென்றில்லை.
எதிர்காலத்திற்காகவும்,
வாழ்விற்காகவும் இறந்தோம்.
மனிதன் போருடன் ஜெயிப்பான்!"
அவைகள் மறைந்து போயின.
இருட்டு, கடும் இருட்டு
நான் தனிமையாகத் திரும்பினேன்.

அது ஒரு கோடையிரவாயிருந்தது.

க.கலாமோகன்



இதயத்தில் கொலைவெறியும், கைகளில் வாளும் கத்திகளும் மினுங்க, மண்ணெண்ணெய் நிரம்பிய தகரங்களுடன் அவர்கள் வந்தார்கள். இரவு கவிந்த பிற்பாடு, தங்களுடைய சிறு குடிலுக்குள் வழமை போல ஒடுங்கிக் கொண்ட அந்தப் பதினைந்து குடும்பங்களுக்கும் வெளியே பயங்கரமாகக் கேட்ட ஆரவாரமும், கூச்சலும் நிச்சயமாகவே ஒரு அவலச்சாவையே உணர்த்தியிருக்க வேண்டும்.

''அப்போது தான் எங்களுடைய இரவுச் சாப்பாட்டு நேரம்.'' இருபத்திரண்டு வயது மாகன் காளியம்மா சொன்னார். ''பிள்ளையள் நித்திரையாகப் போற நேரம் எனக்கு அவர்களுடைய சத்தம் கேட்டது.''

அண்டை வீட்டிலிருந்த சிங்கள மக்களின் தகவல்களின்படி நூற்றைம்பது பேர் கொண்ட குழு ஒன்று ஆக்ரோஷத்துடன் தமிழர்கள் வாழ்ந்து வந்த கிராமத்துக்குள் போயிற்று. (இங்கினியாகலைப் புறமாக இருந்த இந்தக் கிராமத்தில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒன்றாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.)

பொலிஸ் நிலையத்தையும் தாண்டி இந்தக்குழு சென்ற போது 'புலிகள் எங்களைக் கொல்கிறார்கள் நாங்கள் உங்களைக் கொல்லப் போகிறோம்...' என்று உரத்த தொனியில் கத்திக் கேட்டது. பின்னர் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனப் பலர் அலறும் சத்தம் கேட்டதாக அவர்கள் தெரிவித்தார்கள்.

''நான் என்னுடைய மூன்று குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு, மூத்த மகனை என் பின்னால் ஓடிவருமாறு சொல்லி விட்டு ஓடினேன்'' என்றார் காளியம்மா. நூறுக்கும் சற்று அதிகமாகத் தமிழர் வாழும் இந்தச் சிறு சமூகத்தில் இருபத்தாறு பேர் வெட்டிக் கொல்லப்பட்டு விட்டார்கள் இது நடந்தது 12ம் திகதியாகும்.

''வீட்டிற்குப் பின்புறமாக உள்ள காட்டுப்பக்கமாக நாங்கள் ஓடினோம்; அப்போது என்னுடைய மூத்தமகன் மணிவண்ணனை அவர்கள் பிடிப்பதைக் கண்டேன். தகரங்களிலிருந்து மண்ணெண்ணெயை அவன்மீது ஊற்றி நெருப்புப் பற்ற வைத்தார்கள்'' என்று காளியம்மா சொல்கிறபோது முகம் முழுவதுமே அவருக்கு அழுகையாகப் போய் விட்டது...

''எனது அம்மா, சகோதரன், சகோதரி அனைவருமே கொல்லப்பட்டு விட்டனர். நான்கு நாட்கள் காட்டினுள் ஒளிந்திருந்து விட்டு இந்த அகதி முகாமிற்கு வந்து சேர்ந்தேன்...',

இங்கினியாகலையில், இந்தப் படுகொலைகள் நடந்த இடத்தில் உடைந்து போன சில விளையாட்டுப் பொம்மைகளும், பாதி எரிந்த ஆடைகளும் எரிந்து தூர்ந்துபோன பதினைந்து குடில்களுக்கிடையே வீசப்பட்டுக் கிடக்கின்றன. மனதைப் பொசுக்கும் மரணத்தின் நெடி இன்னும் அங்கு வீசிக்கொண்டு இருந்தது. உடைக்கப்பட்ட கோவிலுக்கும், நொருக்கப்பட்ட பிள்ளையார் சிலைக்கும் இடையே ஆச்சரியமாய் ஒரு ஊதா நிறப்பூ மலர்ந்துள்ளது.

— லண்டன் ரைம்ஸ், ஜேம்ஸ் பிரிங்கின் எழுதியதிலிருந்து:...

# அரசியலமைப்பில் ஓரவஞ்சனை

**- சட்டத்தாரணி -**

இலங்கையின் முதலாவது அரசியல் அமைப்புச் சட்டம் சோல்பரி பிரபு என்னும் ஆங்கிலேயரினால் இயற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டது. இச் சோல்பரி அரசியலமைப்பு 1972ம் ஆண்டுவரை வலுவில் இருந்தது.

குறுந் தேசிய இனங்களைப் பொறுத்தவரை சோல்பரி சட்டத்தில் முக்கியமான அம்சம் சரத்து 29 ஆகும். சிறுபான்மை மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் ஒரு அம்சமாக இது விளங்கியது. சரத்து 29 பின்வருமாறு கூறுகிறது ;

எந்தவொரு சட்டமும் எந்தவொரு சமூகத்தின் மீதோ அன்றி மதத்தின் மீதோ, மற்றைய சமூகங்களின் மேல் அல்லது மற்றைய மதங்களின் மேல் சுமத்தப்பட்டிராத சட்டுப்பாடுகளை விதிக்க முடியாது. மேலும், ஒரு குறிப்பிட்ட இனத்தையோ மதத்தையோ சார்ந்த நபருக்கு மற்ற இனத்தையோ மதத்தையோ சார்ந்த நபர்களுக்குக் கொடுக்கப்படாத சிறப்புரிமைகளோ அன்றி முன்னுரிமைகளோ வழங்கப்பட முடியாது.....

29வது சரத்து வலுவில் இருக்கும் போதே 1956ம் ஆண்டு ''தனிச் சிங்களச் சட்டம்'' இயற்றப்பட்டது; மலையக மக்களின் வாக்குரிமைகள் பறிக்கப்பட்டன; பல்கலைக் கழக அனுமதியில் ''தரப்படுத்தல்'' ''கோட்டா'' முறை என்பன புகுத்தப்பட்டு சிறுபான்மை மக்கள் பாதிக்கப்பட்டனர். 1950 - 1960இற்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கைப் பெரும்பான்மையினர் மத்தியில் ஒரு பிறநாட்டவரால் இயற்றப்பட்ட சோல்பரி அ. அ. சட்டத்தை இட்டு அதிருப்தி உருவாகியது.

பின்னர் 1972ம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கீழ் இலங்கை, பிரித்தானிய நாட்டுடனான தொடர்புகளை கோட்பாட்டு அரசியல் அளவில் துண்டித்து ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இவ்வேளையில் சோல்பரி அ. அ. சட்டம் புறக்கணிக்கப்பட்டு ஒரு புது அ. அ. சட்டம் இயற்றப்பட்டது இப்புதிய அ. அ. சட்டம் தமிழ் மக்களினால் எதிர்க்கப்பட்டது.

1972ம் அ. அ. சட்டத்தில் சோல்பரி அ.அ. சட்டத்தின் 29வது சரத்து சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அத்துடன் சிங்கள மொழி மட்டுமே அரசகரும மொழியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 1956ம் ஆண்டில் ''தனிச்சிங்களச் சட்டம்'' பிரகடனப்படுத்தப்பட்டபொழுது சோல்பரி அ. அ. சட்டத்தின் 29வது சரத்து தமிழ் மக்களுக்கு அவர்களது உரிமைகளை ஓரளவு பாதுகாக்க உதவியாக இருந்தது. ஆனால் 1972ல் 29வது சரத்து அகற்றப்பட்டதுடன் ''தனிச்சிங்களச் சட்டமும்'' அரசியலமைப்பின் அங்கமாக்கப்பட்டது தமிழ் மக்களிடையே மிகப்பெரியளவில் கிலேசத்தை உருவாக்கியது.

பின்னர் 1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தபோது 1972ம் ஆண்டு அ. அ. சட்டத்தை புறக்கணித்து 1978ம் ஆண்டு அ. அ. சட்டத்தை இயற்றியது. இதுவே தற்பொழுது வலுவிலுள்ள அ. அ. சட்டமாகும்.

இவ் 1978ம் ஆண்டு அ. அ. சட்டம் தற்போது 17வது திருத்தத்தை எட்டிப்பிடித்து விட்டது. இத் திருத்தங்கள் யாவும் ''இலங்கை மக்களின்'' அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதோடு நாட்டின் ''சுபீட்சத்தையும்'' நோக்கமாகக் கொண்டே இயற்றப்படுகின்றன என்பது பொதுவான அபிப்பிராயம். மேற்குறிப்பிட்ட திருத்தங்களுள் முக்கியமான திருத்தங்கள் சிறுபான்மைத் தேசிய இனங்களின் ''பிரச்சனைகளுக்கும்'' இடர்களுக்கும் தீர்வு காண்பதற்காக இயற்றப்பட்டன எனக் கூறப்படுகின்றன.

பல்வேறு இனக் குழுமங்களும், பல மதங்களும் செறிந்துள்ள இலங்கையில் அ. அ. சட்டத்தின் 9ம் உறுப்புரை பௌத்த மதத்திற்கு முதன்மைத்தானம் வழங்குகின்றது. அத்துடன் பௌத்த சாசனத்தை பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மற்றைய மதங்கள் எல்லாவற்றையும் பொறுத்தவரையில் ''மதச் சுதந்திரம்'' மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மற்றைய மதங்கள் பெயரிடப்படக்கூட இல்லை. இலங்கையின் பல மதச் சூழலில் பௌத்தமதத்திற்கு மாத்திரம் முதன்மைத்துவம் வழங்கப்பட்டிருப்பது ஒரு ஆரோக்கியமான விடயமல்ல என்பது பொது அறிவு.

பல்மொழி பேசும் இலங்கையில் மொழிப்பாவனையும் ஒரு சிக்கலான விடயமாகக் கருதப்படுகின்றது. அ. அ. சட்டத்தின் 18ம் உறுப்புரை பின்வருமாறு கூறுகின்றது.

18 (1) இலங்கையின் அரசகரும மொழி சிங்கள மொழியாதல் வேண்டும் (The Official Language of Sri Lanka shall be Sinhala)

(2) தமிழும் அரசகரும மொழியாகக் கருதப்படலாம் (Tamil shall also be an official Language)

(3) ஆங்கிலம் இணைப்பு மொழியாதல் வேண்டும். (English shall be the link Language)

உறுப்புரை இல. 18 (2) (3) 13வதுதிருத்தச் சட்டத்தினால் சேர்க்கப்பட்டது. (1987ம் ஆண்டு)

நடைமுறையில் மேற்குறிப்பிட்ட அளவுகூட மொழிப்பாவனை பிரயோகிக்கப்படாத முறையில் ''Tamil shall also be என்று வரைந்து 'Sinhala and Tamil shall be the official Languages of Sri Lanka'' என்று வரையாததன் நோக்கம் ஐயத்திற்குரியது மட்டுமல்ல, பெரும்பான்மை இனக் குழுமத்தைச் சார்ந்த சட்டவரைஞர்களுக்கும், அறிஞர்களுக்கும் தமிழ் மொழிக்குச் சமவுரிமை அளிப்பதில் இன்னும் இருக்கும் தயக்கத்தையுமே காட்டுகிறது.

மேலும் நிர்வாக மொழியைப் பொறுத்தவரையில் மேலோட்டமாக வடக்கு கிழக்கு தவிர்ந்த பகுதிகளில் சிங்கள மொழியே நிர்வாக மொழியாக பயன்படுத்தப்படும். இதனடிப்படையில நீதிமன்றங்களின் மொழியும் வடக்கு கிழக்கு தவிர்ந்த பகுதிகளில் சிங்கள மொழியாகவே இருக்கும். ஜனாதிபதிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த தமிழ் மொழி பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தமிழையும் நிர்வாக மொழியாகப் பயன்படுத்தக் கட்டளையிட உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் இதுகையாளப்படுவது இல்லை.

இலங்கை சுதந்திரமடைந்து சில வருடங்களுக்குள்ளேயே சிங்கள தமிழ் மக்களிடையே ஆழம் பெறத் தொடங்கிய பிளவு 1970-1976 காலப்பகுதியில் ஒரு தனிநாட்டுக் கோரிக்கையாக வடிவெடுத்

→ 7ம் பக்கம்.

# யாருக்கு எதிரான யுத்தம்?

வடக்குக் கிழக்கில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற யுத்தம் ஒரு இன எதிர்ப்பு யுத்தம் அல்ல, இது பயங்கரவாத - விடுதலைப் புலிகளுக்கு எதிரான - நியாயமான யுத்தம் என்று சனாதிபதி பிரேமதாஸ கண்டியில் நடைபெற்று வந்த கம் உதாவ கண்காட்சியில் பேசுகையில் தெரிவித்துள்ளார். ஆனால் உண்மை நிலை என்ன, அவர் சொல்வதை ஏற்றுக் கொள்ளலாமா இல்லையா என்பது இன்றுவரை எமக்குத் தெளிவாக இல்லை.

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் கடந்த 14 மாதங்களாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையின் போது என்ன விசயங்கள் பேசப்பட்டன, புலிகள் தரப்பில் என்ன கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. , அரசு தரப்பில் எவை எவை ஏற்கப்பட்டன, எவை எவை மறுக்கப்பட்டன, என்ற விடயம் இன்று வரை யாருக்கும் தெரியாது.

அரசு தரப்பிலோ, அல்லது விடுதலை புலிகள் தரப்பிலோ யுத்தம் தொடங்கி இத்தனை நாள் ஆகியும் கூட இதுவரை இது சம்பந்தமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அரசு தரப்பில், மட்டக்களப்பில் கைது செய்யப்பட்ட ஒரு முஸ்லிம் வாலிபரை விடுவிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் பேசச் சென்றதை தொடர்ந்தே யுத்தம் மூண்டது எனச் சொல்லப்படுகிறது. ஆனால் நிதானமாக யோசிக்கும் இடத்தில் இந்த ஒரு சிறிய சம்பவம் இத்தகைய ஒரு பெரிய யுத்தத்திற்கு காரணமாக இடமளித்து இருந்திருக்க முடியுமா என்பது சந்தேகமாகவே உள்ளது. ஆனால், இன்றுவரை வந்துள்ள செய்திகளை நோக்கும் போது, இதற்கு முன்பே, திட்டவட்டமான சில காரணங்கள் யுத்தத்திற்கு காரணமாக இருந்திருக்கின்றன எனத் தோன்றுகிறது. வடக்கு கிழக்கு இணைப்பை துண்டித்து, கிழக்கிற்கு மட்டும் தனியான மாகாண சபையை உருவாக்குவது பற்றிய யோசனையை அரசு கொண்டிருப்பதாக தெரிகிறது. இதுபற்றிய சனாதிபதியின் எண்ணத்தை பத்திரிகையாளர்களுடன் பேசுகையில் திரு. ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்துள்ளார்.

இந்தியப் படையின் இலங்கை வருகைக்கு முன்பு, இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் நடாத்திய யுத்தத்தின் போதும் சரி, இந்தியப்படை நடாத்திய யுத்தத்தின் போதும் சரி, மூடப்படாமல் இருந்த யாழ் போதனா வைத்தியசாலை இப்போது கடந்த சில வாரங்களாக மூடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண நகரம் முழுவதும் குண்டுத் தாக்குதல் முன்னெப்போதையையும் விட அதிகளவில் நடாத்தப்பட்டுள்ளது. கொழும்பில்,




700க்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் பலர் கொழும்பு வந்து போக்குவரத்தின்மையால் வடக்குக்கோ கிழக்கிற்கோ திரும்பமுடியாமல் போனதால் தங்கியவர்கள்; வெளிநாட்டு ஏஜன்சிகளிடம் காசு கொடுத்துவிட்டு கொழும்பில் தங்கியவர்கள், கொழும்பிலேயே வேலை பார்ப்பவர்கள் என்பவர்களை உள்ளடக்கியவராவர். கைது செய்யப்பட்ட இவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள், என்ன ஆனார்கள் என்ற விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை; தெரிந்து கொள்ளவும் முடியாத நிலையில் உள்ளனர். வடக்கு கிழக்கில் மொத்தம் 3 1/2 லட்சம் மக்கள் அகதிகளாகியுள்ளனர். திருகோணமலையில் அகதிமுகாமிலிருந்து இளைஞர்கள் கடத்திச்செல்லப்பட்டு கொல்லப்பட்டதாக தகவல்கள் வருகின்றன.

வடக்கு கிழக்கிற்கு உணவு கொண்டு செல்லும் லொறிகளும், போக்குவரத்துகளும் தடைசெய்யப்பட்டுள்ளன. இந்த விதமான அரசு நடவடிக்கைகளை நோக்கும் போது, இது தமிழர்களுக்கு எதிரான யுத்தமா அல்லது புலிகளுக்கு எதிரான யுத்தமா என்ற சந்தேகம் ஏற்படுவதை தவிர்க்க முடியவில்லை.

தேசிய பாதுகாப்பு நிதிக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை அப்பாவி மக்களின் உயிரிழப்புக்கும் பாதுகாப்புக்கும் கொடுக்க விரும்பவில்லை.

எப்படியோ, யுத்தத்திற்கு வாய்ப்பான ஒரு சூழலை எதிர்பார்த்துக் காத்திருந்தது போலவே அரசின் நடவடிக்கைகள் எண்ண வைக்கின்றன. உண்மையில் அரசு இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரான ஒன்றானதல்ல எனக் கருதினால்

1. கொழும்பில் நடாத்தும் பரவலான கைதுகளை நிறுத்த வேண்டும்.
2. யாழ் மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு வைத்தியசாலைகளை இயங்க அனுமதிக்க வேண்டும்.
3. வடக்கு கிழக்கு இணைப்பை நிராகரிக்கும் யோசனையை அமுல் நடத்த முயலாதிருக்க வேண்டும்.
4. வடக்கு கிழக்குக்கான போக்குவரத்து வாய்ப்புகளையும், உணவு, எரிபொருள் விநியோகத்தையும் தடைசெய்யாதிருக்க வேண்டும்.

ஆனால், செய்யுமா?

இதைப் பொறுத்தே, தமிழ் மக்களுக்கு எதிரான போரா அல்லவா என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

நன்றி - நூலகத்திட்டம்



**World Solidarity Forum on Sri Lanka for Justice and Peace**

69/12 Soi Supith Ramintha Rd Bangkok 10230, Thailand

Tel 02 5105921 • Telex 21014 Chanatu TH Attn 5105921 • Fax 662 5105921

# மு.கா. தவிசாளரின் சு.மா.

இலங்கையில் மனித உரிமைகள் மீறல் பற்றியும், மனித உரிமைகளுக்காகப் போராடி வரும் இயக்கங்களுக்கும், போராடிகளுக்கும் பலம் சேர்க்கும் வகையிலும், சர்வதேச ரீதியான ஆதரவைத் திரட்டித் தரும் வகையிலும், World Solidarity Forum on Sri Lanka என்னும் அமைப்பு தனது முதலாவது சர்வதேசக் கூட்டத்தை தாய்லாந்தில் நடத்திற்று. இலங்கையிலிருந்து இருபது பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இவர்களுள் மனித உரிமை இயக்கத்தவர்கள், ஜனநாயக உரிமைகளைப் பேணும் இயக்கத்தவர்கள், ஆய்வாளர்கள், பெண்நிலைவாதிகள் எனப் பல பிரிவினரும் அடங்குவர். சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததும் அதன் சார்பில் கட்சியின் தவிசாளரும், வடக்குக் கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவருமான எம். எச். சேகு இஸ்ஸத்தீன் கலந்து கொண்டமையும் குறிபபிடத்தக்கது.

இந்த மகாநாட்டில் இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்த மகாநாட்டில் கலந்து கொண்டு திரும்பிய பின் எம். எச். சேகு இஸ்ஸத்தீன் அவர்களுடனான பேட்டியொன்றை சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பத்திரிகையான முஸ்லிம் காங்கிரஸ் (மலர் 5 ; இதழ் 9) வெளியிட்டுள்ளது. அப்பேட்டியில் உண்மைக்கு மாறான பல தகவல்களை அவர் தெரிவித்துள்ளார் என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளமை விசனத்துக்குரியது.

அவருடைய பேட்டியின் உண்மைக்கு மாறானவை என்று நாம் சொல்லும் அம்சங்களைப் பார்ப்போம் :

**1. மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட இந்த மகாநாட்டில் பெரும்பாலும் கிறிஸ்த்தவ பிரதிநிதிகளே கலந்துகொள்கிறார்கள்.**

1. பெரும்பாலான கிறிஸ்தவப் பிரதிநிதிகளே கலந்து கொண்டனர் என்பது பிழை. இலங்கையிலிருந்து ஐந்து புத்த பிக்குகளும் (தேரவாதம்) தாய்லாந்திலிருந்து மூன்று பிக்குகளும் (தேரவாதம்), ஜப்பானிலிருந்து ஒரு முக்கியமான மஹாயான பிக்குவும் மட்டுமல்லாது இந்தியாவிலிருந்து ஸ்வாமி அக்னி வேஷ் எனும் இந்துத் துறவியும் கலந்து கொண்டார். இவர்களனைவரும் மனித உரிமைக்கான தீவிர போராளிகள் என்பது குறிப்பிடத்தக்கது. பங்குபற்றிய 83 பிரதிநிதிகளில் ('நூற்றுக்கும் அதிகமான' என்று 'முஸ்லிம் காங்கிரஸ்' இதழ் தரும் தகவல் பிழை) கிறிஸ்தவ,

முஸ்லிம், இந்து, கத்தோலிக்க, பௌத்த பிரதிநிதிகள் இருந்தனர். பங்குபற்றியோர் பட்டியலைப் பார்த்தால் உண்மையில் எம்மதத்தினரும் அதிகளவில் இல்லை என்பது புரியும். குறிப்பாக கிறிஸ்தவர் அல்லாதவர்களே அதிகம். (பட்டியல் தேவைப்படுவோர் இ. நீ. ச. இயக்கம், 6, அலோ அவனியு, கொழும்பு-3 எனும் விலாசத்திற்கு எழுதலாம்.)

**2. மகாநாட்டில் கலந்து கொண்ட அதிகமான நாடுகளிலிருந்து குறைந்த பட்சம்**

ஒரு தமிழ்ப் பிரதிநிதியாவது பங்குபற்றியதை மிகுந்த ஆச்சரியத்தோடு என்னால் அவதானிக்க முடிந்தது.

3. இந்த தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்ததோடு, தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக தமிழ் ஈழத்துக்கு சமீபமான ஒரு தீர்வையே அவர்கள் கொண்டிருந்தனர்,

4. வடக்கு கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம்களின் நிலைமை பற்றி, அவர்களின் அபிலாஷை - தனித்துவம் - பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பாக அவர்கள், எவருமே எதையுமே பேசத் தயாராக இருக்கவில்லை!

2. சேகு இஸ்ஸத்தீன் அவர்களுடைய மாபெரும் தவறு அவருடைய மேற்படி குற்றச் சாட்டாகும். ஏனெனில் இனத்துவம், அது தொடர்பான பிரச்சனைகள் மற்றும் தேசிய இனச் சிக்கல் என்னும் ஆய்வுப் பட்டறையில் (Workshop) சேகு இஸ்ஸத்தீன் பங்கு கொண்டார். (மகாநாட்டில் மொத்தம் ஐந்து பட்டறைகள் : ஜனநாயக உரிமைக்கு ஒன்று, அமைதி சமாதானம், ராணுவமயமாக்கலை எதிர்த்து மற்றொன்று, அபிவிருத்தியும் பொருளியல் நீதியும் என இன்னொன்று, சர்வதேச சமூகத்தின் பங்கு பற்றி மேலுமொன்று)

சேகு இஸ்ஸத்தீனை விட கலாநிதி சீலன் கதிர்காமர் இ. நீ. ச. இயக்கச் செயலாளர் ச. பாலகிருஷ்ணன் மற்றும் இலங்கைத் தாய்மார்கள், புதல்விகள் அமைப்பின் சார்பில் அனிதா பெர்ணாண்டோ ஜனநாயக உரிமைகளைப் பேணுவதற்கான இயக்கத்தின் சார்பில் (MDDR) திரு. விமல் பெர்ணாண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுப் பட்டறையில் இலங்கை முஸ்லிம்களது தனித்துவம் மட்டுமன்றி, மலையக மக்களதும் தனித்துவம் வலியுறுத்தப்பட்டது மட்டுமன்றி இலங்கையில் முஸ்லிம் மக்கள் குறிப்பாக எதிர்நோக்கும் பிரச்சனைகளும் ஆராயப்பட்டன. இலங்கையிலிருந்து பங்குபற்றிய எல்லோரும் ஏகமனதாக இந்த விசயங்கள் பற்றிய பட்டறைத் தீர்மானத்துக்கு உடன்பட்டனர். இந்த விவரங்கள் World Solidarity Forum அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது. சேகு இஸ்ஸத்தீன் மட்டுமல்ல ஏனைய இலங்கைப் பிரதிநிதிகளும் முஸ்லிம் மக்களது பிரச்சனை தனித்துவம் பற்றி குரல் கொடுத்தனர் என்பது விவரக் கொத்தினைப் பார்த்தால் தெரியவரும்.

இந்தப் பட்டறைக்கே இவர் 25 நிமிடம் தாமதமாகத் தான் வந்தார் என்பது இங்கு நிச்சயமாகக் குறிப்பிடவேண்டியது ஆகும்.

3. மூன்று நாட்கள் நிகழ்ந்த மகாநாட்டில் மூன்றாவது நாளும் இறுதி அமர்வும் ஆன அன்று மகாநாட்டுத் தீர்மானங்கள் காலையில் விவாதத்துக்கு எடுக்கப்பட்டன. இலங்கை முஸ்லிம் மக்களைப் பற்றிய தீர்மானம் ஒன்றும் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் காலை அமர்வு முழுவதுமே சேகு இஸ்ஸத்தீன் சமுகமளிக்கவில்லை, முஸ்லிம்கள் பற்றிய தீர்மானத்தைப் பற்றிய ஆலோசனைகளை தலைவி கேட்டபோது இறுதி முடிவாக சேகு இஸ்ஸத்தீனைக் கேட்பதாகத் தீர்மானித்து அவரைத் தேடிய போது அவர் மகாநாட்டு மண்டபத்திலேயே இல்லை. இந்த நிலையில்தான்

இத்தகைய ஒரு பகைப்புலனில்தான், முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆழ அகலமாக அந்த மகாநாட்டில் எனனால் முன்வைக்க முடிந்தது.

என அவர் பேட்டியில் தெரிவிக்கிறார்!

மாநாட்டின் ஆரம்பத்தில் ஒரு சில நிமிடம் உரையாற்றியதைத் தவிர சேகு இஸ்ஸத்தீனின் பங்களிப்பு இந்த மாநாட்டில் எதுவுமே இல்லை. அவ்வுரைகூட இலங்கை முஸ்லிம் மக்களின் பிரச்சனைகளை புள்ளி விபரத்துடன் தர்க்க ரீதியாக ஆணித்தரமாக முன்வைக்காமல் எல். ரீ. ரீ. யினர் முஸ்லிம் மக்களை கொல்கிறார்கள்; முஸ்லிம் காங்கிரசை அரசியல் நடவடிக்கைகளிலீடுபட விடுகிறார்களில்லை என்பதைத் திருப்பித் திருப்பிச் சொல்வதாகவே இருந்தது. (அவர் சொன்ன விவரம் உண்மை என்பதும் எந்த இலங்கைப் பிரதிநிதியாவது அதனை மறுக்கவில்லை என்பதும் வேறு. இலங்கைப் பிரதிநிதிகளும் அதே விசயத்தைச் சொன்னார்கள் என்பதையும் அவர் வசதியாக தனது பேட்டியில் மறந்து விட்டார்.)

முஸ்லிம் மக்களது பிரச்சனை பற்றி சர்வதேச அமைப்புகளுக்கும், மனித உரிமை இயக்கங்களுக்கும் தகவல் தருவதற்கு ஒரு சிறு கடதாசித் துண்டுதானும் அவர் கொண்டு வரவில்லை! முஸ்லிம் மக்களையாவது விடுங்கள் முஸ்லிம் காங்கிரஸ் பற்றியாவது ஏதாவது profile, manufesto, திட்டம் கொண்டு வந்தாரா என்றால் அதுவும் இல்லை ஏனைய எல்லா அமைப்புக்களும் தத்தமது பிரசுரங்கள் அறிக்கைகள் கொண்டு வந்து மாநாட்டு மண்டபத்தில் காட்சிக்கு வைத்திருந்தன! எல்லாவற்றிற்கும் மேலாக, மூன்று நாள் மாநாட்டிலும் அவர் சமுகமளித்த நேரம் புறக்கணிக்கதக்க அளவுசிறியதாகும்.

அடுத்த முறையாவது சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அக்கறையும், பிடிப்பும், துடிப்பும், விவரமும் கொண்ட தெரிந்த ஒருவரை அனுப்ப வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம்! அஷ்ரஃப் அவர்கள் இதுபற்றி கவனமெடுப்பார் என்று நம்புகிறோம். இறுதியாக சேகு இஸ்ஸத்தீன் அவர்களின் பேட்டியில் இந்த தாய்லாந்து மாநாடு சம்பந்தப்படாத ஒரு விசயம் பற்றி ஒரு சிறு குறிப்பு;

'இலங்கையின் மூன்றாவது பெரும் அரசியல் சக்தியாகவும், வடகிழக்கு முஸ்லிம்களின் ஏகோபித்த பிரதிநிதியாகவும் முஸ்லிம் காங்கிரஸை மக்கள் அங்கீகரித்திருப்பதால் இந்தச் சந்தர்ப்பம் (தாய்லாந்து மாநாட்டில் பங்கு பற்றும் சந்தர்ப்பம்) எங்களுக்குக் கிடைத்தது' என்று சொல்கிறார் சேகு இஸ்ஸத்தீன்.

தமிழ் மக்களின் ஏகோபித்த ஒரே பிரதிநிதி தாம் தான் என்று விடுதலைப் புலிகள் திரிகரணசுத்தியாக நம்பிச் செயல்பட்டு வந்துள்ளமை தமிழ் மக்களின் போராட்டத்துக்குப் பாரிய பின்னடைவுகளைக் கொண்டு வந்தது மட்டுமல்ல தமிழ்ப் போராட்டத்துள்ளேயே ஜனநாயகத்தை கொன்று விட்டது என்பது எந்த அரசியல் அவதானிக்கும் தெரிந்தது.

'வடக்குக் கிழக்கு முஸ்லிம்களின் ஏகோபித்த பிரதிநிதியாக' உரிமை கோரும் உங்கள் கைகளிலும் கொலைக் கருவிகள் எதிர்காலத்தில் இருக்க நேர்ந்தால் தயவு செய்து இன்னொரு விடுதலைப் புலிகளாக மாறாமல் இருங்கள்.

—ராஜ்—

## அரசியலமை..

(ஆறாம் பக்கத் தொடர்)

தது. இதைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் அரசியல் அமைப்பின் 6வது திருத்தச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இத் திருத்தச் சட்டத்தின் கீழ் அரச ஊழியர்கள், சட்டத்தரணிகள் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களும் தனிநாட்டு கோரிக்கையை கைவிட்டு, இலங்கையின் அரசியலமைப்பை கடைபிடித்துப் பாதுகாப்போம் என்ற வாக்குறுதியை வழங்க வேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டது. இதனால் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்த வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். அரசியல் நீரோட்டத்தில் இருந்து, அ. அ. சட்டத்தினால் தமிழர் பிரதிநிதிகளை வெளியேற்றிவிட்டு அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சனைகளை யாருடன் பேசித்தீர்க்க முடிவு செய்தது என்று திரு, ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்குத்தான் வெளிச்சம்.

தமிழ் மக்கள் இடத்து காட்டப்படும் பாரபட்சம் (Discrimination) சட்டவாக்க முறைகளிலும் பார்க்க அதிகளவில் நிர்வாக, ஆட்சி முறைகளின் மூலம் நடத்தப்படுகின்றது. சட்டவாக்கல் முறைகளில் ஓரளவு சிறுபான்மையினரை தாக்கும் சட்டங்களை இனம் கண்டுகொள்ள முடிகின்றது. ஆனால் நிர்வாகத்துறை (Administrative measure) அல்லது ஆட்சித்துறை (Execuetive measure) மூலம் காட்டப்படும் பாரபட்சத்தை எளிதில் இனம் கண்டு வெளிப்படுத்துவது கடினமாகும். ஏனெனில் சிங்கள பௌத்த மேலாட்சி நிறுவனமயப்பட்டு மட்டுமல்லாமல் இந்த நிறுவனமயப்பட்ட தன்மையே சாதாரணமானதும், நியாயமானதும் என்ற மனோபாவம் ஆட்சித்துறையிலும் நிர்வாகத்துறையிலும் ஆழ வேரூன்றி விட்டமையுமேயாகும்.

# சரிநிகர்


## கவிஞரும் புதல்வரும் பலி!

கல்முனைப் பிரஜைகள் குழுத் தலைவரும், பிரபல கவிஞருமான பாண்டியூரன் (எஸ். கணபதிப்பிள்ளை) பட்டாளத்தால் கொல்லப்பட்டு எரிக்கப் பட்டுள்ளார் எனத் தகவல்கள் கூறுகின்றன.

அவருடைய இரு புதல்வரைகளையும் 'காணவில்லை' எனவும் தெரியவருகிறது.



(கொலை) களத்தில் மோட்டார் பட்டாளம்




**அரசதகவல்:**

பலியான புலிகள் - 800
பட்டாளம் - 547
மக்கள் - 58

**கொழும்புப் பத்திரிகைத் தகவல்:** (சிங்களம், ஆங்கிலம்)

பலியான புலிகள் : 2517
பட்டாளம் : 546
மக்கள் - 0

ஆனால் நமக்குக் கிடைத்த தகவல்களின் படி, கிழக்கில் மட்டும் பலியான மக்கள் தொகை : 460!






"சமாதானப் பொறி" முறிகிறது: மறுபடியும் போர்.



## கொலைக்களக் கணக்கெடுப்பு.
### ஜூன் - 11 - ஜூலை - 15



## 'முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்'

### மு. கா. தூதுக்குழு கோரிக்கை
### கடத்தப்பட்ட பலர் கொல்லப்பட்டுள்ளனர்

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம்கள் பாதுகாப்பற்ற நிலையில் வாழ்வதாகவும். அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் ஜனாப் சேகு இஸ்ஸதீன்; மு. கா. எம். பீ. ஜனாப் ஹிஸ்புல்லா ஆகியோர் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து கேட்டுக் கொண்டனர்.

மட்டக்களப்பு, குருக்கள் மடத்தில் 68 முஸ்லிம் பயணிகள் கடத்திக் கொல்லப்பட்டிருப்பதாகவும், ஏறாவூரில் 62 முஸ்லிம் இளைஞர்கள் கட்டத்தப் பட்டுள்ளதாகவும் "தேசரி"க்குத் தெரிவித்த ஜனாப். ஹிஸ்புல்லா, எம். பீ., குருக்கள் மடத்தில் கொலையுண்டவர்களின் சடலங்களை பெறுவதற்கு நீதியமைச்சர் ஹமீட், இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்க

முஸ்லிம்களின் கப்பல் கொலை தொடர்பாக அரச தரப்பில், 38 பேர் எனவும், முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் 68 பேர் எனவும் சொல்லப்படுவதால் தெளிவான தகவல்களுக்காக முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகம் சென்று விசாரித்தோம்.

ஹிஸ் புல்லா, எம்.பி. இந்தியா சென்றிருப்பதால் எதுவித உறுதியான தகவலையும் தம்மால் தரமுடியவில்லை எனத் தெரிவிக்கப் பட்டது.

எப்படியிருப்பினும், முஸ்லிம் படுகொலைகள் கிழக்கில் நிகழ்ந்துள்ளன எனவே தெரிய வருகிறது.

சரிநிகர் மாத இதழ், கல, 6, அலோ சாலை, கொழும்பு-3, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம், (MIRJE) சார்பில் ச. பாலகிருஷ்ணனால், கொழும்பு-10, லிட்டில் ஸ்டார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. 21.07.90.